# ஏழு தரிசனங்கள்

**1**



நான் முதலாகக் கண்ட தரிசனம் முஸோலினி என்பவன் எத்தியோப்பியாவின் மேல் படையெடுத்து அதை எளிதில் கைப்பற்றுவான் என்பதாம். நான் முதலில் அதை அறிவித்தபோது, அநேக எதிர்ப்புகளுக்கு அது ஆளானது. ஆனால் நான் கண்ட விதமாகவே அது சம்பவித்தது. முஸோலினி தன்னுடைய நவீன யுத்த ஆயுதங்களை உபயோகித்து அந்நாட்டைக் கைப்பற்றினான். அந்நாட்டின் சுதேசிகளுக்கு அவனை எதிர்க்கவும் கூடத் தருணமில்லாதபடியாயிற்று. முஸோலினி, தன்னுடைய சொந்த ஜனங்கள் அவனை எதிர்த்து, பயங்கரமான முடிவை அடைவானென்றும் அத்தரிசனம் எனக்கு வெளிப்படுத்தியது. அதுவும் பிழையில்லாமல் நிகழ்ந்தேறியது.

**2**



நான் கண்ட அடுத்த தரிசனம், அடால்ஃப் ஹிட்லர் என்னும் ஆஸ்திரியா தேசத்தான் ஜெர்மனி நாட்டில் சர்வாதிகாரியாய்த் தோன்றி உலக மகாயுத்தம் நடைபெறக் காரணமாயிருப்பான் என்று முன்கூட்டி அறிவித்தது. சீக்ஃபிரீட் எல்லையும் (SIEGFRIED LANE) அதை மேற்கொள்ள நம்முடைய சைனியங்கள் படும் பாடுகளையும் அது எனக்குத் தெளிவாகக் காண்பித்தது. அன்றியும், ஹிட்லர் மர்மமான் முடிவை அடைவான் என்பதையும் அது காண்பித்தது.

**3**



நான் கண்ட மூன்றாவது தரிசனம் உலக அரசியலோடு சம்பந்தப்பட்டது. பாஸீஸம் (FACISM), நாஸீஸம் (NAZISM), கம்யூனீஸம் (COMMUNISM), என்னும் மூன்று பெரிய கோட்பாடுகள் இவ்வுலகத்தில் தோன்றுமென்றும், கம்யூனிஸம் மற்ற இரண்டையும் மேற்கொள்ளுமென்றும் இது எனக்கு அறிவித்தது. அப்பொழுது, `ருஷியாவை கவனி, ருஷியாவை கவனி, வடக்கு பாகத்தின் ராஜாவாகிய அவனைக் கவனிக்கவும்' என்ற சத்தத்தை நான் கேட்டேன்.

**4**



நான்காவது தரிசனம், இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பிறகு விஞ்ஞானத்தில் ஏற்பட விருந்த முன்னேற்றத்தைக் காண்பித்தது. பிளாஸ்டிக் என்னும் சாதனத்தால் உண்டாக்கப்பட்ட ஒரு மோட்டார் வண்டி, யாரும் ஓட்டாமலே, தூரத்திலிருந்து இயக்கப்பட்டு (REMOTE CONTROL) அழகான ரஸ்தாக்களின் வழியாய் செல்வதை நான் அத்தரிசனத்தில் கண்டேன். அந்த வண்டியிலிருந்தவர்கள், ஏதோ ஒரு விளையாட்டில் குதூகலமாக ஈடுபட்டிருந்தனர்.

**5**



ஐந்தாவது தரிசனம், நம்முடைய காலத்திலுண்டாகும் நல்லொழுக்க மின்மையைக் குறித்தது. பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்பட்டதனால், பெண்கள் மிஞ்சிவிட்டனர் என்பதைத் தேவன் எனக்கு வெளிப்படுத்தினார். மனிதனின் அதிகாரத்திற்கு அவர்கள் இனியும் கீழ்ப்பட்டிருக்காமல், சம உரிமை கோரினர் என்பதன் அறிகுறியாக அவர்கள் தங்கள் கூந்தல்களைக் கத்தரித்துக் கொண்டனர். மேலும் அவர்கள் ஆண்களின் உடைகளைத் தரித்து, கடைசியில் நிர்வாணிகளாகக் காணப்பட்டனர். அந்தத் தரிசனத்தின் கடைசிபாகத்தில், அத்தி இலையின் வடிவில் அமைந்த ஒரு சிறு துணியை மாத்திரம் இடுப்பின் முன்னால் உடுத்தி, மற்றபடி முழுவதும் நிர்வாணமா யிருந்த ஒரு பெண்ணைக் கண்டேன். முழு உலகமும் தாறுமாறான நிலைமையை யடைந்து நல்லொழுக்கத்தைக் கைவிடும் என்பது எனக்கு உணர்த்தப்பட்டது.

**6**



நான் கண்ட ஆறாம் தரிசனத்தில், மிகவும் அழகுள்ள ஒரு பெண் அமெரிக்காவில் தோன்றினாள், அவள் அழகிற் சிறந்திருந்தாலும், மிகவும் கொடூரமான குணம் படைத்தவளாயிருந்தாள். ரோமன் கத்தோலிக்க சபை அமெரிக்காவில் வளர்ந்து ஆதிக்கம் பெறுவதை இது குறிக்கிறது என்று நான் நம்புகிறேன்; இல்லையேல், அமெரிக்காவில் ஸ்திரீகள் ஓட்டுரிமை பெற்றதன் காரணமாக, ஒரு ஸ்திரீ அமெரிக்காவில் அரசியல் வல்லமை பெறுவதையும் இது குறிக்கலாம்.

**7**




நான் கடைசியாகக் கண்ட ஏழாம் தரிசனத்தில், மிகப்பெரிய சத்தத்தைக் கேட்டேன். நான் திரும்பிப் பார்த்தபோது, அமெரிக்கா முழுவதும் பாழடைந்து, இடிந்து புகைக்காடாய் இருக்கக் கண்டேன்.